**18.04.2023. OS. 101/2016** வா.சா.2 **–**செல்வராஜ்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதியின் தாயார் பெயர் பேச்சிமுத்து. வாதி சுப்பிரமணியன் செட்டியார் மீது வழக்கு போட்டுள்ளார், அவரது முழு பெயர் அது தான். வாதியின் தாயார் தாவா சொத்தின் மீது வேறு நீதிமன்றத்தில் வழக்கு போட்ட விபரம் நான் சொல்ல கேள்விப்பட்டுள்ளேன். அந்த சொத்தில் ஒரு பாழடைந்த வீடு இருக்கிறது என்று சொன்னால் நல்ல ஓட்டுவீடு இருந்தது கடைசி வருடம் வரை அதில் ஆட்கள் குடியிருந்தார்கள். தற்போது காலியாக உள்ளது. மின் இணைப்பு 3 வருடங்களுக்கது முன்பே துண்டிக்கப்பட்டுள்ளது. அந்த இடம் சம்மந்தமாக 3 பேர்களுக்குள் அடிக்கடி சண்டை வந்ததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அந்த வீடு இடிந்து மழை பெய்யும்போது தண்ணீர் தேங்கி ஆபத்து ஏற்படும் என்பதால் 3 பேர்களும் சேர்ந்து எழுதி கொடுத்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த 3 சகோதரர்களும் அந்த சொத்தை விற்பதற்கு முயற்சி செய்தார்கள். அந்த சொத்தை விற்க விடாமல் வாதியும், அவரது தாயாரும் வில்லங்கம் செய்து வருகிறார்கள். பிரதிவாதி பெயர் சுப்பிரமணியன் தான், வேறு பெயர் இல்லை. 25.04.1999ல் பிரதிவாதி, வாதியின் தாயார் குடியிருக்கும் வீட்டிற்கு மாலை 4.00மணியளவில் வந்தார் அப்போது வாதி, வாதியின் தாயார், பிரதிவாதி, நான் மொத்தம் 5 பேர் இருந்தோம். அவர்களுக்குள் ஏற்கனவே என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது. நாகராஜ் பிரதிவாதியிடம் கிரையம் தர சொல்லி கேட்டதற்கு பிரதிவாதி மறுத்துவிட்டார், அதனால் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததாக கேள்விப்பட்டேன், அதில் என்ன பேசினார்கள், யார், யார் கலந்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. பொதுவாக கிரைய ஒப்பந்தம் பத்திரம் வாங்கி எழுதிக்கொள்வது வழக்கம். இந்த வழக்கில் பிரதிவாதி பத்திரம் வாங்கி எழுதிக்கொடுத்ததாக தெரியவில்லை. பிரதிவாதி, வாதியிடம் எந்தெந்த தேதியில், எவ்வளவு தொகை வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு சகோதரர்களுக்கிடையே எவ்வித பிரச்சனை இல்லை என்றும்,

அவர்களுக்குள் ஏற்பட்ட கடன் பிரச்சனைக்கும், தொழில் நஷ்டத்திற்கும் தாவா இடத்தை விற்க முயற்சி செய்யும்போது வாதி அதில் வாடகைதாரராக இருந்ததை பயன்படுத்தி போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து வில்லங்கம் செய்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி, வாதிக்கு ஒரு வெள்ளை பேப்பரில் எழுதி கொடுத்தார், அதில் 3 பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள், அதில் ராதாகிருஷ்ணன், த-பெ.சீனிசெட்டியார், மற்ற இருவர் பெயர் விபரம் தெரியாது. ராதாகிருஷ்ணன் மற்றும் சாட்சிகள் கையெழுத்து போட்ட விபரத்தை பின்னால் பார்த்து தெரிந்து கொண்டேன். இப்போதிலிருந்து 2 வருடங்களுக்கு முன்பு பார்த்து தெரிந்துகொண்டேன், அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. பிரதிவாதி வாதிக்கு எவ்வித கிரைய ஒப்பந்தமும் எழுதி கொடுக்கவில்லை என்றும், வாதி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் என்பதாலும், நீண்ட காலம் நண்பர் என்பதாலும், நீதிமன்றத்திற்கு என்னை அவர்தான் அழைத்துவந்ததாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.